# திஹகொட பிரதேச சபை
# மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 யூன் 19 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 யூலை 15 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள திஹகொட பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் 01 ஏக்கர் 2 றூட் 25 பேர்சஸ் பரப்பிலான காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான ஓய்வூதியப் பற்றுச் சீட்டின் பிரகாரம் செலுத்த வேண்டிய ரூபா 1,460,860 தொகையான ஓய்வூதியப் பங்களிப்புப் பணம் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் ஐந்தொகையின் பிரகாரம் ரூபா 76,879,754 தொகையான நானாவித கடன்பட்டோரின் பெறுமதியில் முத்திரைக் கட்டணம்,

நீதிமன்றத் தண்டப் பணம், வீதி விளக்கு பராமரிப்பு, கைத்தொழில் உதவிகள் போன்றவற்றின் பெறுமதியான ரூபா 61,466,558 தொகை கழிக்கப்பட்டதன் பின்னர் பெறுமதி ரூபா 15,413,196 ஆக இருக்க வேண்டிய போதிலும் கடன்பட்டோர் பட்டோலையின் பெறுமதி ரூபா 3,151,131 ஆனமையால் வேறுபாடு ரூபா 12,262,065 ஆக இருந்தது.

(ஈ) நானாவித கடன்கொடுத்தோர் (நிர்மாணம்) 2012 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோர் பதிவேட்டின் பிரகாரம் பெறுமதி ரூபா 21,418,647 ஆக இருந்த போதிலும் பிரதான பேரேட்டின் பிரகாரம் பெறுமதி ரூபா 9,903,188 ஆனமையால் வேறுபாடு ரூபா 11,515,459 ஆக இருந்தது.

### 1.3.2 தொங்கல் கணக்கு

முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 2,382,841 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதி 2012 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் தீர்க்கப்படாமல் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

11 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் பெறுமதி ரூபா 132,110,704 ஆக இருந்ததுடன் உபயோகப் பதிவேடுகள்/ பட்டோலைகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 137,679,412 ஆனமையால் ரூபா 5,568,708 வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சியிருந்த கிடைக்கவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 15,366,938 ஆக இருந்ததுடன் 01 வருட காலத்தை விஞ்சியிருந்த செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 5,233,811 ஆக இருந்தது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 148,235,973 தொகையான பத்து கணக்கு விடயங்களுக்கான சான்றுகள் இன்மையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,346,938 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,183,867 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 2.3 | 304.8 | 147.5 |
| (ii) | வாடகை | - | 1,214.3 | 399.3 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 56.0 | 265.9 | 83.0 |
| (iv) | ஏனைய வருமானம் | 92,445.0 | 9,244.5 | 6,969.2 |

#### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 717,179 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 5,700,000 |

### 2.2.3 நிலுவை வாடகை மற்றும் கட்டணம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாகக் கிடைக்கவேண்டிய ரூபா 1,031,843 தொகையான வாடகை மற்றும் கட்டணங்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கடை வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குரிய கடைகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 333,313 வாடகையும், சுகாதார சேவை அலுவலகத்திலிருந்து ரூபா 66,000 தொகையான வாடகைப் பணமும் நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) திஹகொடையில் 16 கடைகளுக்கு 2012 ஆம் ஆண்டிற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் 05 கடைகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 129,021 தொகையான வாடகை நிலுவையாகக் காணப்பட்டது.

(இ) யட்டியன புதிய சந்தைத் தொகுதியில் கடைகளுக்கு 2012 ஆம் ஆண்டிற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் 09 ஆம் இலக்க கடையிலிருந்து ரூபா 124,150 தொகையான ஒரே தடவையில் கிடைக்கும் பணமும் 13, 14, 15 ஆம் இலக்க கடைகளிலிருந்து ரூபா 10,750 வாடகையும் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாகக் காணப்பட்டது.

(ஈ) தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2011 சனவரி 01 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் சகல உடன்படிக்கைகளும் 3 வருடங்களுக்கு ஒரு தடவை நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும் திஹகொடை கடைகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 நீர்க் கட்டணம்**

**-------------------------**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் நீர் வழங்கல் செயற்திட்டத்தின் மூலம் நீர் வழங்கப்படுகின்ற நுகர்வோர்களின் எண்ணிக்கை 202 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 401,800 தொகையான நீர்க் கட்டணம் நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக நீர் வழங்கல் செயற்திட்டத்திற்கு சபை நிதியத்திலிருந்து ரூபா 534,517 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் நீர்க்கட்டணமாக ரூபா 289,438 தொகை மாத்திரமே கிடைத்திருந்தது. இதன் பிரகாரம் சபைக்கு ரூபா 245,079 தொகையான மேலதிக செலவினப் பொறுப்பை செய்வதற்கு ஏற்பட்டிருந்தது.

**2.2.6 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

**--------------------------------------------**

(அ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 83,178 நிலுவையான மீதி காணப்பட்டது.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 213 ஆம் பிரிவின் பிரகாரம் வியாபார அனுமதிப்பத்திரம் பெறாத வியாபார நிலையங்களுக்காக அந்த ஆண்டில் 06 மாதங்களை விஞ்சுவதற்கு முன்னர் வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டில் அனுமதிப்பத்திரக் கட்டணம் பெறாத வியாபார நிலையங்களுக்காக வழக்குத் தொடரப்பட்டிருக்கவில்லை.

(இ) திஹகொடை பிரதேச செயலகத்தில் வியாபாரப் பெயர்களைப் பதிவு செய்யும் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது வியாபாரப் பெயர்கள் பதிவு செய்து சான்றிதழைப் பெற்ற 48 புதிய வியாபார நிலையங்கள் ஆண்டின் அனுமதிப்பத்திரக் கட்டணப் பதிவேட்டில் பதியப்பட்டிராததுடன் அந்த வியாபார நிலையங்களிலிருந்து அறவிடவேண்டிய அனுமதிப் பத்திரக் கட்டணம் கைவிடப்பட்டிருந்தது.

## 2.3 ஒப்பந்த நிருவாகம்

சபைக்கு 2012 ஆம் ஆண்டிற்காக மூலதன உதவியாக ரூபா 80,255,518 தொகை கிடைத்திருந்ததுடன் அத்தொகையிலிருந்து மாகாண குறித்த, மகநெகும, கமநெகும, பன்முகப்படுத்தப்பட்ட நிதியம் மற்றும் சபை நிதியத்தின் கீழ் ரூபா 85,564,516 தொகை செலவிடப்பட்டிருந்தது.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) வீதிகளில் கொங்கிரீட் சிறுகற்கள் பதித்தல் வேலை தொடர்பான மதிப்பீடுகளில் உரிய வீதியின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட இடம் முடிவடையும் இடம் என்பன காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சமூர்த்திச் சங்கத்திற்கு நிர்மாண வேலைகள் நேரடியாக வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்தச் சங்கங்களால் உரிய வேலைகள் நிறைவேற்ற முடியும் எனடபதற்கான முறையான உறுதிப்படுத்தல் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) கமநெகும மற்றும் மகநெகும நிதி மூலங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட வீதி நிர்மாணங்கள் தொடர்பாக உரிய கிராம உத்தியோகத்தரின் அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிர்மாண வேலைகளுக்குரிய உடன்படிக்கை சபையின் செயலாளரினால் கையொப்பமிடப்படாதிருந்ததுடன் தலைவர் மாத்திரம் கையொப்பம் இட்டிருந்தார். மேலும் ஒப்பந்த உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) வீதி விளக்கு செயற்படுத்துனர் சமர்ப்பித்த அறிக்கைகளில் வீதி விளக்குகளைப் பொருத்துதல் மற்றும் பழுதுபார்த்தல்களை உரியவாறு இனங்காணக்கூடிய வகையில் பதிவுகள் வைக்கப்படாமையினால் விநியோகிக்கப்பட்ட 757 விளக்குகள் பொருத்தப்பட்டமையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறிவிடவேண்டிய ஊழியர் கடன் மற்றும் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 990,751 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் இடமாறிச் சென்ற உத்தியோகத்தர் மற்றும் 4 ஊழியர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 42,270 தொகை உள்ளடங்கியிருந்தது.

## 2.5 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் 28 ஆம் இலக்கத்தின் பிரகாரம் சேவையின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் உள்ள முக்கியமான பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் பெறப்பட வேண்யிருந்த போதிலும் அவ்வாறான அங்கீகாரம் பெறப்படாது சேர்க்கப்பட்ட மூன்று ஊழியர்களுக்கான சம்பளமாக மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து ரூபா 333,492 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 1990 இன் 28 ஆம் இலக்க மாகாண சபைகள் திருத்த அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அதிகாரக் கையளிப்பின் கீழ் தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விநியோகிக்கப்பட்ட 1997 பெப்ரவரி 01 மற்றும் 2002 மார்ச் 14 ஆந் திகதிய கடிதங்களின் ஆலோசனையின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு நிறுவன ரீதியான ஊழியர்களை நியமிப்பதற்கான அதிகாரம் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தின் கீழ் அச் சபையின் செயலாளர் வசமாக இருந்த போதிலும் மேற்கூறப்பட்ட நாட் சம்பள மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட ஊழியர்களை தலைவர் நியமித்திருந்தார்.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்